# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590

**ஆணை நாள் – 16.04.2025**

**முன்னிலை**

**முனைவர் மா.செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.CP.6131/F/2024**

திரு S. கந்தசாமி -- மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / கோட்டப்பொறியாளர்,
நெடுஞ்சாலைத்துறை, கள்ளக்குறிச்சி - 606 202. -- பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 19.11.2024 |
| மனுதாரரின் புகார் (CP) மனு நாள் | 20.12.2024 |

****

**ஆணை**

இவ்வழக்கு இன்று (16.04.2025) இவ்வாணையத்தில் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு S. கந்தசாமி என்பவர் காணொளி காட்சி வாயிலாக ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு க.கு. நாகராஜன், கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை, கள்ளக்குறிச்சி என்பவருக்கு பதிலாக திருமதி ஜெ. மணிமொழி, உதவிக் கோட்டப்பொறியாளர் (நெ), க(ம)ப, கள்ளக்குறிச்சி என்பவர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், கள்ளக்குறிச்சி. நெடுஞ்சாலைத்துறை அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், கோட்டப்பொறியாளர் (நெ) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கள்ளக்குறிச்சி அவர்களின் குறிப்பாணை எண்.1970/2024/அ1/நாள் 08.11.2024 மற்றும் உதவி கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை கள்ளக்குறிச்சி அவர்கள் பெற்றுக்கொண்ட பதிவஞ்சல் நாள் 30.04.2024 ஆகிய கடிதங்கள் தங்கள் அலுவலகத்திற்கு எப்போது கிடைக்கப்பெற்றது. அக்கடிதங்கள் தங்கள் அலுவலகத்தில் பெற்று பதிவு செய்த பதிவேடு, கடித எண்., பதிவு நாள் ஆகியவற்றின் விவரம், நீலமங்கலம் கிராம புல எண்.16 மற்றும் 21 ஆகியவற்றில் உள்ள ஆக்கிரமிப்பு பற்றிய விவரங்கள் கோரிய கடிதத்தின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பது பற்றிய விவரம் உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 3 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 18(1)-ன் கீழான புகார் மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் புகார் மனு இன்று (16.04.2025) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு க.எண்.2061/2024/அ1 நாள் 18.12.2024 தேதியிட்டு ஏற்கெனவே தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை இவ்வாணையத்தின் பார்வைக்கும் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தனது மனுவில் நீலமங்கலம் கிராம புல எண்.16 மற்றும் 21 ஆகியவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவது தொடர்பாக என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்பது குறித்த தகவல்களை நாளதுவரையில் தனக்கு வழங்கப்படவில்லை என்றும், தனது மனுவில் கோரியுள்ள தகவல்களை தனக்கு முழுமையாக பெற்று வழங்குமாறும் ஆணையத்தை கோரினார்.

6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், கீழ்க்கண்ட உத்தரவு இவ்வாணையத்தால் பிறப்பிக்கப்படுகிறது :-

- மேற்படி, மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள நீலமங்கலம் கிராம புல எண்.16 மற்றும் 21 ஆகியவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவது தொடர்பாக என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்பது குறித்த விவரங்களை கள்ளக்குறிச்சி வருவாய் வட்டாட்சியர் அவர்களிடமிருந்து பெற்று மனுதாரருக்கு முழுமையாக **'தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது'** என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற பதினைந்து நாட்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல்கள் ஆகியவற்றினை இவ்வாணையத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, மனுதாரரின் புகார் மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.CP.6131/F/2024</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத்தகவல் அலுவலர் /
கோட்டப்பொறியாளர் (நெ),
கட்டுமானம் (ம) பராமரிப்பு,
கள்ளக்குறிச்சி கோட்டம்,
கள்ளக்குறிச்சி - 606 202.

<u>**வழக்கு எண்.CP.6131/F/2024**</u>

<u>**மனுதாரர்**</u>

திரு S. கந்தசாமி, த/பெ. செங்கோடக்கவுண்டர்,
காட்டு கொட்டாய்,
மாத்தூர் கிராமம் (ம) அஞ்சல்,
சின்னசேலம் வட்டம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம் - 606 207.

Copy to: File
SNPS / 22.04.2025